RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s-22289

# பெரியாழ்வார் பாடிய கண்ணனின் இளமைப்பருவ பாசுரங்களில் மெய்ப்பாடு

வே. அழகுமலைக்கண்ணன் [அ, *], கோ. சுப்புலெட்சுமி [அ]

[அ] தமிழ்த்துறை, தமிழ் உயராய்வு மையம், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-625001, தமிழ்நாடு, இந்தியா.

# Authenticity in Kannan's youthful songs sung by Periyalwar

V. Azhagumalaikannan [a, *], G. Subbulakshmi [a]

[a] Department of Tamil, Tamil Research Center, Senthamil College, Madurai – 625001, Tamil Nadu, India

* Corresponding Author: kannanvam@gmail.com

Received: 11-09-2022
Revised: 16-11-2022
Accepted: 30-11-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Literatures are emerging from time to time. A literary work succeeds when it brings out the same feelings felt by the author and evokes a kind of feeling to the reader. The writer must immerse himself in the feelings of the character which he creates and bring it out in his work so that the reader too can feel the same feelings. Authenticity is very important in literature. That is why the reader can see what the author saw. When truth is found in a piece of literature, the reader becomes immersed in it. He involve himself in the meaning of what the poet is s saying. Truth is a psychological thing. It is powerful enough to move the reader out of his place. In literature, the poet can be successful if he brings out the truth through his writing. It is not that so easy for a male writer to portray himself as a woman and fully express women feeling in his work. Moreover, motherhood is something that only women can experience. It is very difficult for a man to achieve such a position. Periyalwar has made such an effort in his work Thirumozhi. In order to enjoy Kannan's activities, he composed hymns pretending to be his mother. An introduction is given to the juvenile hymns found in the Periyazwar hymns. This article finds the truth of Ayarbadi women found in Tirumozhi and finding the truth of Yasodhai in depth, the truth of the motherhood is found and all these are analyzed and examined in the inner hymns.

**Keywords:** Periyalwar, Thirumozhi, Motherhood, God Kannan, Hymns

## முன்னுரை

மனிதன் பிள்ளைப்பருவம், இளமைப்பரும், முதுமைப்பருவம் என மாற்றம் பெறுவது இயற்கை. இதை எவரும் மாற்ற இயலாது. ஒவ்வொருவரும் ஒருபருவம் முற்று பெற்றதும் அடுத்த பருவத்தை எய்தியதை அறிவர். ஆனால் தாய் என்பவளுக்கு மட்டும் தன் குழந்தை இளமைப்பருவம் எய்தினாலும், முதுமைப்பருவம் எய்தினாலும் குழந்தையாகவே தென்படும். இது அறிவின் சிந்தனை அன்று. பாசத்தின் வெளிப்பாடு. பெரியாழ்வாரும் இத்தகு நிலையை எய்துகிறார். கண்ணன் வளர்ந்து இளமைப்பருவம் எய்தினாலும் பெரியாழ்வாருக்கு குழந்தை கண்ணனாகவே தெரிகிறார். அவ்வப்போது கண்ணன் வளர்ச்சி அடைந்துவிட்டு இளமைப்பருவம் எய்தியது பெரியாழ்வாரான யசோதைக்கு நினைவுவருகிறது. அந்நிலைகளில் பெரியாழ்வார் தமது உணர்ச்சிகளை (மெய்ப்பாடு) எங்ஙனம் வெளிக்கொணர்கிறார் என்பதை விளக்குவது இலக்கியத்தின் உயிராகும். மேலும் இளமைப்பருவம் துவங்கிய உடன் அகவாழ்வும் துவங்குகிறது. அத்தகு அகவாழ்வுகளில் கன்னியர் பலர் கண்ணன் மீது காதல் கொள்கின்றனர். கண்ணனும் அகவாழ்வுக்கு ஏற்றார் போல் மாறுகிறான். அத்தகு சூழலில் பெரியாழ்வார்

கண்ணன் மீது காமுறும் பெண்களின் தாயாக மாற்றம் கொள்கிறார். இதுவரை கண்ணனின் தாயானவள் தற்பொழுது கன்னியரின் தாயாக மாறும் பொழுது மெய்ப்பாடு எங்ஙனம் வெளிப்படுகிறது என்பதை ஆய்வதாகவும் இக்கட்டுரை அமைகிறது. தமிழுக்கே சிறப்பானதாகக் கருதப்படும் அகத்திணை மெய்ப்பாடு குறித்தும் விளக்கப்படுகிறது.

## பெரியாழ்வாரின் இளமைப்பருவ பாசுரங்கள்

ஒன்றினை படித்து அதன் பொருண்மை இன்னது என ஆராய்ந்து பின் தெளிவது என்பதைக் காட்டிலும் ஒன்றை படித்த உடன் இதன் பொருண்மை இன்னது தான் என அறியச் செய்யும் வல்லண்மை இலக்கியத்தில் பயின்று வரும் மெய்ப்பாட்டிற்கு உண்டு என்கிறார் தொல்காப்பியர். இதை

“உய்த்துணர் வின்றித் தலைவரு பொருண்மையின்

மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்”

என்ற தொல்காப்பிய செய்யுளியலின் 196ஆவது நூற்பாவால் அறியலாம் (Vellaivaranar, 1989). நாடக நூலுக்கு இலக்கணம் கூறும் செயிற்றியத்தின் நூற்பாக்கள் இளம்பூரணரால் பல இடங்களில் மேற்கோளாக மெய்ப்பாட்டியலுக்கு கொணரப்படுகிறது. அச்செயிற்றியம் மெய்ப்பாட்டியலுக்கு பொருண்மை கூறும் பொழுது ‘ஒருவன் அனுபவித்து உணர்ந்த ஒன்றை தனது படைப்பை படிக்கும் மற்றொருவனும் அவ்வாறே உணரும் வண்ணம் வெளிப்படுத்துவதற்கு உதவுவது மெய்ப்பாடு ஆகும்’ என்கிறது. இதை

“உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதல்

மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந் தோரே”

என்ற தொல்காப்பிய செய்யுளியலின் 3ஆவது நூற்பா உரையால் அறியலாம் (Vellaivaranar, 1989). பெரியாழ்வார் திருமொழியில் இடம்பெற்றுள்ள, இரண்டாவது பத்தில் ஒன்பதாவது திருமொழி தொடங்கி, மூன்றாம் பத்தில் எட்டாம் திருமொழி வரையிலும் கண்ணனின் இளமைப் பருவத்தைப் பற்றிப்பெரியாழ்வார் கூறுகின்றார். அதாவது, பத்து திருமொழிகளில் கண்ணனின் இளைமைப் பருவ தாயாகவும், கன்னியரின் தாயாகவும் விளங்குகிறார். விரிவாகக் கூறவேண்டுமெனில், பெரியாழ்வார் 1.பாலக்கீரிடை, 2.கண்ணனைக் குறித்து ஆய்ச்சியர் யசோதையிடம் முறையிடல், 3.யசோதை, கண்ணனுக்கு அம்மம் தர மறுத்தல், 3.கன்றின்பின் போகவிட்டு இரங்கல், 5.கண்ணன் கன்றுகளோடு வரக்கண்டு மகிழ்தல், 6.ஆய்ப்பாடிப் பெண்கள் கண்ணனிடம் காமுறல், 7.கண்ணன் குன்றினைக் குடையாய் எடுத்து ஆயர்களைக் காத்தல், 8.கண்ணன் குழல் ஊதல் என்ற பாசுரங்களில் கண்ணனின் தாயாகவும், 9.கண்ணனிடம் ஈடுபட்ட தலைமகள் இளமைகண்டு நற்றாய் இரங்குவதாகவும், 10.தலைமகனுடன் சென்ற தலைமகளைக் குறித்து தாய்பலபடி வருந்திக் கூறுவதாகவும் இரண்டு திருமொழிகள் அமைத்துள்ளார், எனில் மொத்தம் ‘94’ பாசுரங்கள் இளமைப் பருவத்தை பற்றியனவாக உள்ளன.

கண்ணன் மேல் விருப்பம் கொண்டவர்கள் கண்ணனின் ஏதேனும் ஒருசெயலை பாடிமகிழ்ந்து சென்றுள்ளனர். ஆனால் பெரியாழ்வார் யசோதையிடம் கண்ணன் வாழ்ந்த காலங்களான குழந்தைப் பருவம் முதல் இளமைப் பருவம் முடிய பாசுரம் பாடியுள்ளார். “கண்ணன் கதை கூறிய பலர் அவன் பெருமைகளைக் கரையில் நின்று கூறினர். ஆழ்வாரோ கண்ணனின் கதைவெள்ளத்தில் தரை காணும் அளவும் மூழ்கித் திளைத்தவராய், அவனது அவதாரம் தொட்டு, ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு அனுபவிக்கிறார். அவரது தணியாத தாய்ப்பாசத்தை அவருடைய பாசுரங்கள் நன்கு உணர்த்தகின்றன” (Nagalingam, 2009). மேலும் இதை,

இளமைப்பருவ பாசுரங்களில் மெய்ப்பாடு என்பதில் ‘94’ பாசுரங்கள் உள்ளன. அவற்றில் மெய்ப்பாடு கண்டறிவதற்கான பாசுரங்களாக ‘86’ உள்ளன. இவற்றில் ஆயர்பாடி கோபியர்களின் மெய்ப்பாடும், யசோதையின் மெய்ப்பாடும், அகத்திணை பாசுரங்களில் தாய்மைநிலைப் பாசுரத்தின் மெய்ப்பாடும் பிரித்து கண்டறியப்பட்டுள்ளன.கண்ணனின் தாயாக நின்று கண்ணனை அனுபவித்ததோடு

நில்லாமல் ஆயர்பாடியில் வாழும் கன்னியராகவும், பிறதாய்மார்களாகவும், கண்ணன் மேல் காமுறும் மகளின் தாயாக நின்று வருத்தம் கொள்ளவும் என கண்ணனைச் சுற்றி நிகழும் அனைத்திலும் பெரியாழ்வார் தன்னை உருவகிக்கிறார்.

## ஆயர்பாடி பெண்களின் மெய்ப்பாடு

கண்ணனின் குழந்தைப்பருவம் முதல் கண்ணனின் அழகை அனுபவித்து மகிழ்ந்த ஆயர்பாடி கோபியர் கண்ணனை நினைத்து பெருமிதமும், மகிழ்ச்சியும் கொண்டாலும் கண்ணனின் குறும்புகளால் அவர்களுக்கு வருத்தம் உண்டாயிற்று. எவருடைய சொல்லையும் கேட்காத கண்ணன் தாயின் அன்பிற்கு கட்டுப்படுவான் என கண்ணனின் தாயான யசோதையிடம் முறையிடுகின்றனர்.

## அச்சம்

கண்ணன் செயல்பாட்டால் ஊரில் உள்ள பலரால் பழிஏற்படும் என்றும் கண்ணனின் செயலால் காமுற்ற கோபியர் அவனால் துன்பமுறுவோம் எனவும் அச்சம் கொண்டு யசோதையிடம் முறையிடுகின்றனர். இதை,

"தடம்பட்டு தாமரைப் பொய்கை கலக்கி

விடம்பட்டு நாகத்தை வால்பற்றி ஈர்த்து

படம்பட்டு பைந்தலை மேல் எழப் பாய்ந்திட்டு

உடம்பை அசைத்தானால் இன்று முற்றும்

உச்சியில் நின்றானால் இன்று முற்றும்" (Narayana Velu Pillai, 2008)

என்ற 215ஆம் பாசுரத்தில் காளியன் எனும் பாம்பின் மீது நின்று ஆடியவன், அவன் இன்று எங்களுக்கு செய்துள்ள தீம்பால் நாங்கள் அழிந்தோம் என்கின்றனர். கண்ணன் தங்களுக்கு மகிழ்ச்சியை கொடுக்காமல் போய்விடுவானோ என்ற அச்சமும் இதில் கலந்து உள்ளது. இவ்வாறு கண்ணன் செய்யும் தீமைகளால் பாதிக்கப்பட்டு, அச்சம் கொண்டு கோபியர் முறையிடுமாறு அமைந்துள்ள பாசுரங்கள் 215(3), 216(4), 217(5), 218(6), 219(7), 220(8), 221(9) என்பவை ஆகும்.

## வெகுளி

கண்ணன் தீராத குறும்புகளைச் செய்கின்றான். சிறுவயதிலே தாயிடம் மட்டும் குறும்புசெய்தவன் இன்று இளமையில் ஊரில் உள்ள அனைவரிடமும் குறும்பு செய்கிறான். பிறர் வீட்டில் சென்று வெண்ணெய் முதலிய பல பொருட்களைக் களவுசெய்கிறான். களவுசெய்தது மட்டுமல்லாது அதைச் செய்யாதது போலவே நிற்கிறான். இதனால் அவரவர் தங்கள் பிள்ளைகளை அடிக்கவேண்டிய சூழல் நிகழ்கிறது. இதனால் ஆயர்பாடியில் உள்ள பெண்டிர் அனைவரும் கோபம் கொள்கின்றனர். கண்ணனைக் கட்டுப்படுத்தி வைக்கக்கூறி யசோதையிடம் முன்னறிவுப்பு செய்கின்றனர். அப்போது அவர்களின் கோபம் வெளிப்படுகிறது.

கண்ணனால் மிகவும் பாதிக்கப்பட்ட நங்கை ஒருத்தி யசோதையிடம் வந்து கூறுகிறாள், வெண்ணெயை எல்லாம் விழுங்கி வெறுங்கலயத்தைப் போட்டு உடைக்கிறான் உன்மகன். அவ்வாறு போட்டு உடைத்தது மட்டுமல்லாது அதன் ஓசையைக் கேட்டு மகிழ்ச்சியும் அடைகிறான். இவன் கற்ற கல்வி இதுதானோ? இவனுக்கு நீ இதைத்தான் கற்றுக்கொடுத்தாயோ? என கூறும் ஆய்ச்சி கண்ணன் செய்யும் தீங்கின் தன்மையை யசோதைக்கு சுட்டிக்காட்ட புண்ணில் புளியம்பழச் சாற்றினைப் பிழிந்தது போன்று உள்ளது உன்மகனின் செயல் என்று கடுமையான சினத்தை வெளிக்காட்டுகிறாள். இதை,

"வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை வெற்பிடை

இட்டதன் ஓசை கேட்கும்

கண்ணபிரான் கற்ற கல்வி தன்னைக்

காக்ககில்லோம், உன் மகனைக் காவாய்

புண்ணில் புளிப்பெய்தால் ஒக்கும் தீமை

புரைபுரையால் இவை செய்ய வல்ல

அண்ணல் கண்ணன் ஓர் மகனைப் பெற்ற

அசோதை நங்காய்! உன் மகனைக் கூவாய்" (Narayana Velu Pillai, 2008)

என்ற 202ஆம் பாசுரத்தால் அறியலாம். மற்றொரு கோபியானவள் யசோதையின் வளர்ப்பைக் குறைகூறி வெகுளியடைகிறாள். அருகில் உள்ளோரின் வீட்டில் சென்று தீங்குகள் பலசெய் என்று நீ வளர்க்கிறாய் போலும். ஆகவேதான் அவன் நான் உருக்குவதற்காக அடுப்பில் வைத்திருந்த வெண்ணெயைத் தாழியில் சிறிதும் மிச்சமில்லாமல் உறிஞ்சிவிட்டு பாத்திரத்தையும் உடைத்துவிட்டு தான் உடைக்காதவன் போல் அப்பால் போய் இருக்கிறான். இவ்வாறு தீங்கு செய்வதை அவன் தனக்கு புகழாகக் கொள்கிறான். இவற்றையெல்லாம் நீதான் கூறுகிறாயோ? அவ்வாறு இல்லை எனில் உன்கண்ணனை அழைத்துக்கொள் என கோபம் கொள்கிறாள். இதை,

"திருவுடைப் பிள்ளைதான் தீயவாறு தேக்கமொன்றும்

இலன், தேசுடையன்

உருக வைத்தகுடத்தோடு வெண்ணெய் உறிஞ்சி

உடைத்திட்டுப் போந்து நின்றான்

அருகிருந்தார் தம்மை அநியாயம் செய்வதுதான்

வழக்கோ? அசோதாய்!

வருகவென்று உன் மகன் தன்னைக் கூவாய்,

வாழவொட்டான் மதுசூதனனே" (Narayana Velu Pillai, 2008)

என்ற 204ஆம் பாசுரத்தால் அறியலாம். இதனைப் போன்று கோபியர் கோபம் கொண்டு காணப்படும் பாசுரங்கள் 206(5), 208(7), 210(9), 211(10), 213(1) ஆகியவை ஆகும்.

## நகை

இளமைப்பருவ பாசுரங்களில் நகை மெய்ப்பாடு காணப்படவில்லை. எனினும் கோபியர் கண்ணனை அருகில் இருந்து பார்க்க விரும்பியும், கண்ணனுடன் உரையாட விரும்பியும் ஒரு பொய்கூறி நகை ஏற்படுத்துகின்றனர். இதை,

"சிந்துரம் இலங்கத்தன் திருநெற்றிமேல் திருத்திய

கோறம்பும் திருக்குழலும்

அந்தரம் முழவத் தழைக்காவின் கீழ் வரும்

ஆயரோடுடன் வளைகோல் வீச

அந்த மொன்றில்லாத ஆயப்பிள்ளை அறிந்தறிந்து

இவ்வீதி போதுமாகில்

பந்துகொண்டான் என்று வளைத்து வைத்துப்

பவளவாய் முறுவலும் காண்போம், தோழீ!" (Narayana Velu Pillai, 2008)

என்ற 259ஆம் பாசுரத்தில் கண்ணன் வீதியிலே தன் தோழர்களோடு செல்வான். அவ்வாறு செல்லும் பொழுது அவன் நம்பந்தை திருடினான் எனக் குற்றம் சாற்றி நம்மை கடந்து செல்லாதவாறு தடுத்து நிறுத்துவோம். இதைக்கேட்கும் கண்ணன் புன்சிரிப்பு செய்வான். அப்போது அவன் புன்முறுவலைக் காணலாம் என்கின்றாள். இதனால் கண்ணனுக்கு நகை ஏற்படுதலையும், கோபியரின் விளையாட்டு செயலால் அவர்களுக்கே நகை ஏற்படுதலையும் காணமுடிகிறது.

## அழுகை

அழுகை மெய்ப்பாடு பெரியாழ்வார் திருமொழியில் காணப்படவில்லை. பெரும்பாலும் அழுகைக்கு முன்வடிவான இளிவரல் மெய்ப்பாட்டிலே துன்பத்தை வெளிப்படுத்தும் பாசுரங்கள் முற்றுபெறுகின்றன. கோபியர்கள் ஆடையை கண்ணன் எடுத்துச் சென்று குருந்த மரத்தினில் அமர்ந்து கொள்கிறான். இதனால் ஆடைபோன வருத்தத்தில் கோபியர்கள் அழுவதைக் காணலாம். எனினும் இவ்வழுகையிலும் ஒரு அன்பு வெளிப்படுவதைக் காணமுடிகிறது. இதை,

"குண்டலம் தாழக் குழல்தாழ நாண்தாழ

எண்திசை யோரும் இறைஞ்சித் தொழுதேத்த

வண்டமர் பூங்குழலார் துகில் கைக்கொண்டு

விண்தோய் மரத்தானால் இன்று முற்றும்,

வேண்டவும் தாரானால் இன்று முற்றும்" (Narayana Velu Pillai, 2008)

என்ற 214ஆம் பாசுரத்தில் காணலாம். மொத்தமாக ஆயர்பாடி பெண்களின் மெய்ப்பாட்டினை, காணலாம். ஆயர்பாடியில் உள்ள கோபியர்கள் வழிவெளியாகும் மெய்ப்பாடு கண்ணனின் தாயான யசோதையின் மெய்ப்பாட்டிற்கு நேர்எதிராகவும், அடித்தளமாகவும் அமையும் என்பதால் ஆயர்பாடி கோபியர்களின் மெய்ப்பாடு முதலில் கண்டறியப்பட்டது. அதில், 16 பாசுரங்களில் கோபியர்களின் மெய்ப்பாடு நேரடியாக வெளிப்பட்டது.

## யசோதையின் மெய்ப்பாடு

கண்ணனை குழந்தைப்பருவத்தில் வளர்த்த யசோதை பல்வேறு மெய்ப்பாடுகளை வெளியிட்டுள்ளார். ஆனால் இளமைப்பருவ பாசுரங்கள் அவற்றில் இருந்து முற்றிலும் மாறுபடுகின்றன. சிறுகுழந்தையாக உள்ள போது கண்ணனை தன்னுடனே வைத்து அழகுபார்த்த யசோதை இளம்பரும் எய்திய கண்ணனை கன்று மேய்க்க அனுப்புவது, நண்பர்களுடன் விளையாட அனுப்புவது என செயல்படுகிறார். இதனை தனக்கு ஏதுவாக பயன்படுத்திக்கொள்ளும் கண்ணன் பிறர் வீட்டில் உள்ள வெண்ணெய், நெய், பால், தயிர் முதலியவற்றை திருடி உண்கிறான். அங்குள்ள கோபியர்களையும் வஞ்சிக்கிறான். கலயங்களை உடைக்கிறான். வீரச்செயல்களான கோவர்த்தன மலையைத் தூக்குகிறான். இவ்வாறு பல்வேறு செயல்களைச் செய்கிறான். இதனால் யசோதைக்குப் பெருமிதம், இளிவரல், அச்சம், உவகை முதலிய மெய்ப்பாடுகள் தோன்றுகின்றன.

## இளிவரல்

இளமைப்பருவத்தில் கண்ணனின் செயல்களால் யசோதைக்கு இளிவரல் அதிகமாகவே ஏற்படுகிறது. பிறர் மனையில் திருடுவது, பிறருக்கு தீங்கு செய்வது போன்ற செயல்களால் பலவாக கண்ணனை அனைவரும் திட்டுகின்றனர். அத்துடன் யசோதையே இவ்வாறு செய்யக்கூறுகிறாள் என்றும் சுட்டிக்கூறுகின்றனர். இக்காரணங்களால் யசோதைக்கு இளிவரல் தோன்றுகிறது. இதை,

"கன்னல் இலட்டுவத்தோடு சீடை காரெள்ளின்

உண்டை கலத்தில் இட்டு

என்னகம் என்று நான் வைத்துப் போந்தேன்: இவன்

புக்கவற்றைப் பெறுத்திப் போந்தான்

பின்னும் அகம்புக் குறியை நோக்கிப் பிறங்கொளி

வெண்ணெயும் சோதிக்கின்றான்

உன் மகன் தன்னை, அசோதை நங்காய்! கூவிக்

கொள்ளாய், இவையும் சிலவே!" (Narayana Velu Pillai, 2008)

என்ற 210ஆம் பாசுரத்தில் கண்ணன் மீது கோபிகை ஒருத்தி கோபம் கொண்டு பேசினாலும், யசோதைக்கு அது இளிவரலாக அமைகிறது. தன்மகனின் செயல்களைக்கூறி அவன் இத்தகு தீங்குசெய்கிறான் என்று குறிப்பிடும் பொழுது அதனால் தாயானவளுக்கு இளிவரல் ஏற்படுகிறது. இதனால் தனது இளிவரலை யசோதை சுட்டிக்காட்டுகிறாள். இதை,

"அஞ்சன வண்ணா! அசலகத்தார்

பரிபவம் பேசத் தரிக்க கில்லேன்

பாவியேனுக்கு இங்கே போதராயே" (Narayana Velu Pillai, 2008)

என்ற 203ஆம் பாசுரத்தாலும்,

"ஏதேனும் சொல்லி அசலகத்தார் ஏதேனும்

பேசநான் கேட்க மாட்டேன்" (Narayana Velu Pillai, 2008)

என்ற 207ஆம் பாசுரத்தாலும் அறியமுடிகிறது. இவ்வாறு பிறரால் இளிவுபடுத்தப்பட்ட யசோதை பின் தன்னாலும் தனக்குள்ளே இளிவரலை ஏற்படுத்திக்கொள்கிறாள். அதாவது, சிறுகுழந்தை கண்ணனை தன்னுடனே வைத்து அவன் அழகை அனுபவித்த யசோதை, இளமைப்பருவம் கண்ணன் எய்தினான் என்றவுடன் அவனை கன்றுமேய்க்க தொழிலுக்கு அனுப்புகிறாள். அனுப்பிய பிறது தாய்மனம் அவ்வாறு செய்ததை எண்ணி வருத்தம் கொள்கிறது. தனது மகனின் பெருமைகளை எண்ணி இவனை எவ்வாறு நான் கன்று மேய்க்க அனுப்பினேன் என்று வருந்துகிறாள். மேலும் தன்னைத் தானே திட்டிக்கொள்கிறாள். தனது மகனுக்கு தீங்கு ஏற்பட தாமே காரணமாக அமைந்துவிட்டோம் என துன்பத்தில் மிதக்கிறாள்.

தாயின் அன்பு நேரடியாக வெளிப்படும் பாசுரத்தை இவ்விளிவரல் சுவையில் காணலாம். அழகாக வீட்டில் சுற்றித்திரியும் என்கண்ணனை கால்கள் நோகும்படி கன்றுகளின் பின்னே அனுப்பிவிட்டேனே எப்படிப்பட்ட பாவம் செய்துவிட்டேன் என்று வருத்தம் கொள்கிறாள். இதை,

"அஞ்சன வண்ணனை ஆயர் கோலக் கொழுந்தினை

மஞ்சனம் ஆட்டி மனைகள் தோறும் திரியாமே

கஞ்சனைக் காய்ந்த கழலது நோவக் கன்றின்பின்

என் செயப்பிள்ளையைப் போக்கினேன் எல்லே பாவமே!" (Narayana Velu Pillai, 2008)

என்ற 234ஆம் பாசுரத்தால் அறியலாம். இவ்வாறாகவே கண்ணனை கன்றுமேய்க்க அனுப்பியதை எண்ணி பலவாறாக புலம்புகிறாள் யசோதை தாய். அவ்வகையில் யசோதைக்கு இளிவரல் மெய்ப்பாடு தோன்றுமாறு உள்ள இளமைப்பருவ பாசுரங்கள் 202(1), 204(3),235(2), 236(3), 237(4), 238(5), 239(6), 240(7), 241(8), 242(9), 247(4) ஆகியவை ஆகும்.

## அச்சம்

கண்ணன் சிறுவயதில் இருக்கும்பொழுது பிற அரக்கர்களால் கண்ணனுக்கு தீங்கு ஏதேனும் நிகழ்ந்தவிடக் கூடாது என யசோதை பலபாசுரங்களில் அச்சம் கொள்வதைக் காணமுடிந்தது. ஆனால் இளமைப்பருவ பாசுரங்களில் இது முற்றிலும் மாற்றம் கொள்கிறது. அதாவது கண்ணன் அரக்கர்கள் அனைவரையும் அழித்தது உண்மைதான் இத்தகைய வயதில் இத்தகு செயல்களை செய்யும் இவன் மிகப்பெரியன் என்று எண்ணுகிறாள். மேலும் சிறுவயதில் குழந்தை கண்ணனுக்கு தாய்ப்பால் ஊட்டி அதைக்கண்டு மகிழ்ந்த யசோதை தற்பொழுது கண்ணனின் செயல்களை அறிந்து தாய்ப்பால் கொடுக்க அச்சம் கொள்வதாக கூறுகிறாள். இதை,

"தன்னே ராயிரம் பிள்ளைகளோடு தளிர்நடை இட்டு வருவான்

பொன்னேய் நெய்யோடு பாலும் உண்டொரு

புள்ளுவன் பொய்யே தவழும்

மின்னேர் நுண்ணிடை வஞ்ச மகள் கொங்கை

துஞ்ச வாய் வைத்த பிரானே!

அன்னே! உன்னை அறிந்து கொண்டேன்,

அஞ்சுவன் அம்மம் தரவே" (Narayana Velu Pillai, 2008)

என்ற 223ஆம் பாசுரத்தால் அறியலாம். தாய்ப்பால் கொடுக்க அச்சப்படுவதோடு கண்ணனின் நற்பெயருக்கு இழுக்கு வந்துவிடக்கூடாது என்றும் அச்சம் கொள்கிறாள். அதற்காக சிற்சில கண்ணனின் செயல்களைக் கூறி இவ்வாறு செய்யாதே இது உன்புகழுக்கு ஏற்றது அல்ல என்றும் கூறுகிறாள். அதேநேரத்தில் அவ்வாறு கூறவும் அச்சம் கொள்கிறாள். இதை,

"கொத்தார் பூங்குழல் கன்னி ஒருத்தியைச் சோலைத்

தடங்கொண்டு புக்கு

முத்தார் கொங்கை புணர்ந்திரா நாழிகை மூவேழு

சேன்று பின வந்தாய்

ஒத்தார்க் கொத்தன பேசுவர் உன்னை உரப்பவே

நானொன்றும் மாட்டேன்

அத்தா! உன்னை அறிந்து கொண்டேன், உனக்கு

அஞ்சுவன் அம்மம் தரவே" (Narayana Velu Pillai, 2008)

என்ற 232ஆம் பாசுரத்தால் அறியலாம். மேலும் யசோதையின் அச்ச மெய்ப்பாடு விளங்க உள்ள இளமைப்பருவ பாசுரங்கள் 224(2), 225(3), 226(4), 227(5), 228(6), 229(7), 230(8), 231(9), 251(8) ஆகியவை உள்ளன.

## பெருமிதம்

குழந்தைப் பருவத்தில் மகனின் செயல்பாடுகளில் பெருமிதம் கொண்டாலும் இளமைப் பருவத்தில் தான் அப்பெருமிதம் முற்றுபெறுகிறது. குழந்தைப்பருவத்தில் பல்வேறு அசுரர்களை அழித்ததைக் கூறி பெருமிதம் கொண்டார் பெரியாழ்வார். ஆனால் இளமைப்பருவத்தில் அதுபோன்று இல்லை. பெரும்பான்மையாக கண்ணன் கோவர்த்தன கிரியை தூக்கியதைக் கூறி பெருமிதம் கொள்கிறார்.

கண்ணனின் வீரம் குறித்து பறைசாற்ற தேவர்களே நீங்கள் வீரம் மிக்கவர்களானால் என்மகன் தூக்கியுள்ள இம்மலையை வந்து பிடித்துப்பாருங்கள் என அறைகூவல் விடுவதைக் காணலாம். இதை,

"வானத்திலுள்ளீர்! வலியுள்ளீரேல் அறையோ! வந்து

வாங்கு மினென்பவன் போல்

ஏனத் துருவாகிய ஈசனெந்தை இடவனெ வாங்கி எடுத்தமலை" (Narayana Velu Pillai, 2008)

என்ற 268ஆம் பாசுரத்தால் அறியலாம். யசோதை கண்ணனுக்கு தீங்கு ஏற்பட்டுவிடுமோ என்ற எண்ணத்திலே இருந்தவள். கண்ணனின் அரிய பல செயல்களை அறிந்த பின் சிறிது சிறிதாக கண்ணன் வீரன் அவனை எவரும் அவ்வளவு எளிதில் அளிக்க இயலாது என்பதை அறிகிறாள். அதனால் தன்மகனுக்கு தீங்கு விளைவிக்க எண்ணம் கொள்வோருக்கு அவன் தீங்காக அமைந்து விடுவான். அவனை எவரும் வெற்றி காணஇயலாது என்று குறிப்பிடுகிறாள். இதை,

"பன்றியும் ஆமையும் மீனமும் ஆகிய பாற்கடல்

வண்ணா! உன்மேல்

கன்றின் உருவாகி மெய்ப்புலத்தே வந்த கள்ள

அசுரர் தம்மைச்

சென்று பிடித்துச் சிறு கைகளாலே விளங்காய்

எறிந்தாய் போலும்

என்றும் என் பிள்ளைக்குத் தீமைகள் செய்வார்கள்

அங்ஙன மாவர்களே" (Narayana Velu Pillai, 2008)

என்ற 250ஆம் பாசுரத்தால் அறியமுடிகிறது. இவ்வாறு கண்ணனின் வீரம் குறித்தே பெருமிதம் கொள்ளும் பெரியாழ்வார் கண்ணனின் கலைத்திறனையும் குறித்து பெருமிதம் கொள்கிறார். கண்ணன் குழல் வாசித்தால் அதற்கு இணையாக வேறொன்றும் இல்லை. இந்திரன் முதலிட்ட பல்வேறு தேவர்களும் கண்ணனின் குழலிசைக்கு அடிமையாகிவிடுவர் என்று குறிப்பிடுகிறார். இதை,

"செம்பெருந்தடங் கண்ணன் திரள் தோளன் தேவகி

சிறுவன் தேவர்கள் சிங்கம்

நம்பரன் இந்நாள் குழலூதக் கேட்டவர்கள்

இடருற்றன கேளீர்

அம்பரந் திரியும் காந்தப்ப ரெல்லாம் அமுத

கீதவலையால் சுருக்குண்டு

நம்பரம் அன்றென்று நாணி மயங்கி நைந்து

சோர்ந்து கைம் மறித்து நின்றனரே"(நாராயண வேலுப்பிள்ளை, 2008)

என்ற 280ஆம் பாசுரத்தால் அறியலாம். மேலும் யசோதையின் பெருமிதம் கூறும் இளமைப் பருவ பாசுரங்களாக 249(6), 264(1), 265(2), 266(3), 269(6), 270(7), 272(9), 275(1), 277(3), 278(9), 279(5), 284(10) ஆகிய பாசுரங்கள் உள்ளன.

## உவகை

பிள்ளைப்பருவ செயல்பாடுகள் பெரும்பாலும் எவருக்கும் உவகையளிக்கக் கூடியனவாகவே அமையும். அதிலும் தாய் என்பாளுக்கு அதிகமாகவே காணப்படும். ஆனால் இளமைப்பருவ செயல்பாடுகள் அனைவருக்கும் உவகை அளிக்குமா? என்றால் சிந்திக்க வேண்டியதாகவே இருக்கும். அவ்வாறே பெரியாழ்வார் திருமொழியிலும் உவகை மெய்ப்பாடு யசோதைத் தாய்க்கு சற்று

குறைவாகவே காணப்படுகிறது. எனினும் மகனின் அறிய செயல்களை எண்ணும் பொழுது உவகை தானாக பிறக்கிறது. இளமைப் பருவம் எய்தபிறகு மகன் என்பான்

"மகன்தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை

என்நோற்றான் கொலெனும் சொல்" (Parimelazhagar, 2017)

என்ற குறளின் சொல்போல் அமையவேண்டும். அவ்வாறு ஒரு மகன் அமையும்பொழுது பெற்றோருக்கு உவகை பன்மடங்காக பிறக்கும். அவ்வாறே யசோதையும் தன்மகனை கன்று மேய்க்க அனுப்பியதை எண்ணி பலவாறு வருந்தி நிற்கும் நேரத்தில் சிறப்பாக கன்று மேய்த்து வரும் மகனைக் காணும் பொழுது உவகை பிறக்கிறது. கண்ணனின் அழகைக் கண்டு கண்டு மகிழ்கிறாள், தன்மகன் பொறுப்புள்ளவனாக உருவெடுத்ததை எண்ணி உவகை கொள்கிறாள். நான் ஒருத்தி மட்டுமே உலகின் சிறந்த பிள்ளையைப் பெற்றுள்ளேன் என்று மகிழ்கிறாள். இதை,

"சீலைக் குதம்பை ஒருகாது ஒருகாது

செந்நிறமேல் தோன்றிப்பூ

கோலப் பணைக் கச்சும் கூறையுடையும்

குளிர்முத்தின் கோடாலமும்

காலிப் பின்னே வருகின்ற கடல்வண்ணன்

வேடத்தை வந்து காணீர்

ஞாலத்துப் புத்திரனைப் பெற்றார், நங்கையீர்!

நானே மற்றாரு மில்லை" (Narayana Velu Pillai, 2008)

என்ற 244ஆம் பாசுரத்தால் அறியலாம். மேலும் யசோதையின் உவகை கூறும் இளமைப் பருவ பாசுரங்களாக 246(3), 248(5), 252(9), 281(7), 282(8) ஆகியவை உள்ளன.

## அகத்திணைப் பாசுரங்களில் மெய்ப்பாடு

ஆண், பெண், இருபாலருக்கிடையே வாலிபப் பருவத்தில் இயல்பாய்த் தோன்றும் பாலியல் உணர்ச்சிகள் சங்க அக இலக்கியத்தில் செய்திகளாக உருப்பெற்றுள்ளன. மையப் பாத்திரமான தலைவன், தலைவியர் பல்வேறு சூழலில் அமையும் காதல் உணர்ச்சிகளை பரிமாறிக் கொள்பவர்களாகவும் அதன் தொடர்ச்சியாய் கற்பு (குடும்பம்) வாழ்க்கையை ஏற்று நடத்துபவர்களாகவும் உள்ளனர்.

தலைவன், தலைவி காதல் உணர்வுகள் அவர்தம் விருப்பத்தாலும், மனவேதனையாலும், உடல்வேதனையாலும் சுற்றுச்சூழல் வெறுப்பாலும், பெற்ற இன்பத்தாலும், பெற முனைந்த ஆவலாலும் எனப் பல நிலைகளில் உணர்ந்தவாறு சங்க அக இலக்கியங்களில் வெளிப்படுகின்றன. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான பலவகைப்பட்ட காதல் உணர்வுகளே இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை இவ்வுலக வாழ்க்கை அனுபத்திலிருந்து பெரிதும் விலகியவை அல்ல.

பன்னிரு ஆழ்வார்களால் படைத்தளிக்கப்பட்ட பிரபந்தப் பாசுரங்கள் சில நாயக நாயகி பாவத்தால் இறைவனை வழிபடும் முறையினை விளக்குகின்றன. ஆன்மாக்கள் தம்மை அறிந்து பரம்பொருளோடு இணைதல் வேண்டும் என்பது இவ் ஆழ்வார்களின் நோக்கமாக உள்ளது.

ஆழ்வார்கள் சங்க அக இலக்கிய மரபைப் பக்தி இலக்கிய நாயக, நாயகி பாவத்திற்கு இடம் பெயர்த்தி இருந்தாலும், அவற்றுள் சில வேற்றுமைகள் காணப்படுகின்றன. 'சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறார்' என அக இலக்கணம் குறித்துப் பேசுகிற தொல்காப்பியனின் கருத்திற்கு மாறாக, பக்திக் காதல் தலைவனாக திருமால் வெளிப்படத் தோன்றுகிறான்.

பன்னிரு ஆழ்வார்களால் இயற்றப்பட்ட 3776 பாசுரங்களில் 852 பாசுரங்கள் அகச்சுவை சார்ந்தவையாக காணப்படுகிறது. அகச்சுவை நிறைந்த பாசுரங்களை ஒன்பது ஆழ்வார்கள் பாடியுள்ளனர். அவற்றில் பெரியாழ்வார் பாடியவை 52 அகச்சுவை பாசுரங்கள். இவற்றை

- தலைவி கூற்று பாசுரங்கள் - 03 (257 - 259)
- உரையாடல் கூற்று பாசுரங்கள் - 10 (307 - 316)
- குழுக்கூற்று பாசுரங்கள் - 10 (121, 213 - 221)
- கண்டோர் கூற்று பாசுரங்கள் - 05 (254, 275 - 278)
- தாய்க்கூற்று பாசுரங்கள் - 24(255, 256, 260 - 262,286 - 295, 297 - 305).

என்பதாக பார்க்கலாம். இவற்றில் தாய்க்கூற்று பாசுரங்கள் மட்டும் இங்கு மெய்ப்பாடு கண்டறிய எடுத்துக்கொள்ளப்படுகிறது. அகப்பொருளில் தாய்மைநிலையில் காணப்படும் '24' பாசுரங்களில் பெரியாழ்வார் தன்னை தலைவியின் தாயாக உருவகித்துக் கொள்கிறார். இதுவரை கண்ணனின் தாயாக நின்று பாசுரம் இயற்றியவர் இந்த அகப்பொருள் பாசுரங்களில் மட்டும் தலைவியின் தாயாக நின்று கண்ணனின் அழகை அனுபவிக்கிறார். இயல்பாகவே பெரியாழ்வாரின் மகளான ஆண்டாள் சிறுவயது முதல் திருமாலின் மீது கொண்ட காதல் வைணவ மரபில் கூறப்பட்டு வருவது. பெரியாழ்வாரின் பாசுரத்திலும் இந்நிலை வெளிப்படுவதைக் காணலாம்.

பெரியாழ்வார் தலைவியின் தாயாக தன்னை உருவகித்துக் கொண்டாலும் கண்ணனின்மேல் பெரியாழ்வாருக்கு உள்ள நிலை மாற்றம்கொள்ளவில்லை. எனவே தனது மகளைப்பற்றி வருந்தும் பொழுதும், சிந்திக்கும் பொழுதும் கண்ணனின் புகழ் கூறப்படுகிறது. துவக்கத்தில் தானே தன் மகளை கண்ணனை பார்க்காதே பார்த்தால் நீஅவன் அழகினில் சிக்கிவிடுவாய் என கூறுவதாக அமைகிறது. பெரியாழ்வார் தலைவியின் தாயாக நின்று இயற்றிய பாசுரங்கள் அனைத்தையும் இளிவரல் சுவையில் காணலாம். அதாவது, வருத்தம் கொள்ளுதல் என்பது ஆகும். தலைவியை எண்ணி வருத்தம் கொள்வதாகவே இப்பாசுரங்களைக் காணமுடிகிறது. ஆகவே இவற்றை இளிவரல் மெய்ப்பாட்டில் பொருத்தலாம்.

கண்ணன் எவ்வாறு வயதிற்கு மிஞ்சிய செயல்களைச் செய்தானோ! அவ்வாறே தலைவியும் வயதிற்கு மிஞ்சிய செயல்களைச் செய்கிறாள். சிறுவயதில் களவு ஒழுக்கம் நிகழ்த்தி வருகின்றாளே என வருத்தம் கொள்ளும் தாயாக அமைகிறாள். தலைவியின் வயது நிலையையும், களவு வாழ்வையும் சித்தரிக்கிறார் பெரியாழ்வார். இதை,

"ஐயபுழுதி உடம்பளைந்து இவள் பேச்சும் அலந்தலையாய்

செய்ய நூலின் சிற்றாடை செப்பன் உடுக்கவும் வல்லள் அல்லள்

கையில் சிறு தூதையோடு இவள் முற்றில் பிரிந்து மிலள்

பையரவணைப் பள்ளி யானோடு கைவைத் திவள் வருமே" (Narayana Velu Pillai, 2008)

என்ற 286ஆம் பாசுரத்தால் அறியலாம். களவு வாழ்வில் ஈடுபட்டு சென்ற தன்மகளை யசோதையானவள், தன்னுடைய மருமகளைப் பார்த்து மகிழ்ந்து மணவாட்டியின் தன்மைக்குத் தகுதியாகச் செய்ய வேண்டிய சிறப்புகளைச் செய்வாளோ? அல்லது உடன் போக்கில் வந்தவள்தானே, என உலக மரியாதைக்காகச் சிறிதே கொண்டாடுவாளோ? என்று அச்சம் கொள்ளும் சாதாரண தாயாக மாறுகிறார் பெரியாழ்வார். இதை,

"ஒருமகள் தன்னையுடையேன், உலகம் நிறைந்த புகழால்

திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டு போனான்

பெருமகளாய்க குடி வாழ்ந்து பெரும்பிள்ளை பெற்ற அசோதை

மருமகளைக் கண்டுகந்து மணாட்டுப் பறம் செய்யுங் கொலோ?" (Narayana Velu Pillai, 2008)

என்பதாக 300ஆம் பாசுரம் அமைந்துள்ளது. இதனால் அகப்பொருள் பாசுரங்களில் அமைந்த தாய்மை பாசுரங்கள் அனைத்தும் இளிவரல் மெய்ப்பாட்டிலேயே அமைந்துள்ளன எனலாம்.

## முடிவுரை

இளமைப்பருவ பாசுரங்களில் மெய்ப்பாடு என்பதில் '94' பாசுரங்கள் உள்ளன. அவற்றில் மெய்ப்பாடு கண்டறிவதற்கான பாசுரங்களாக '86' உள்ளன. இவற்றில் ஆயர்பாடி பெண்களின் மெய்ப்பாடும், யசோதையின் மெய்ப்பாடும், அகத்திணை பாசுரங்களில் தாய்மைநிலைப் பாசுரத்தின் மெய்ப்பாடும் பிரித்து கண்டறியப்பட்டுள்ளன. ஆயர்பாடியில் உள்ள இளம்பெண்களின் வழிவெளியாகும் மெய்ப்பாடு கண்ணனின் தாயான யசோதையின் மெய்ப்பாட்டிற்கு நேர்எதிராகவும், அடித்தளமாகவும் அமையும் என்பதால் ஆயர்பாடி பெண்களின் மெய்ப்பாடு கண்டறியப்பட்டது. அதில், 16 பாசுரங்களில் பெண்களின் மெய்ப்பாடு நேரடியாக வெளிப்பட்டது.யசோதையின் மெய்ப்பாடு குழந்தைகண்ணனிடம் இருந்த நிலைக்கும் இளமைப் பருவ கண்ணனிடம் உள்ள நிலைக்கும் மாறுபாடு காணப்பட்டது. இளமைப் பருவ கண்ணனுக்கு தாயாக பெரியாழ்வார் தன்னை 46 பாசுரங்களில் உருவகித்துள்ளார். இங்கு இளிவரல், அச்சம், பெருமிதம், உவகை எனும் நான்கு மெய்ப்பாட்டிற்குள்ளே சுற்றிவருகிறார்.அகத்திணை பாசுரங்களில் தலைவியின் தாயாக உள்ள பெரியாழ்வாரிடம் முழுவதும் இளிவரல் மெய்ப்பாடு விளங்குகிறது.

## References


Nagalingam, N. (2009) Nana Parambarai Thoguthi 2, Ramanandha Adigalar Arakattalai, Coimbatore, India.

Narayana Velu Pillai, (2008) Nalayira Divya Prabantham Uraiyudan, Mullai Nialayam, Chennai, India

Parimelazhagar, (2017) Thirukkural Parimelazhagar Urai, Poompuhar Pathippagam, Chennai, India.

Vellaivaranar, K. (1989) Tholkappiyam Seyyulil Uraivalam, Pathiputhurai, Madurai Kamarajar Palkalikalagam, Madurai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License